செ.வெ.எண்: நாள்: 09.09.16

# விருதுநகர் மாவட்டம்

## அருள்மிகு ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயிலில் வளாகத்தில்"கோயில் தூய்மை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணியை" மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப.,. அவர்கள் தொடங்கி வைத்தார்.

விருதுநகர் மாவட்டம், சுற்றுச்சூழல் துறையின் சார்பில்,அருள்மிகு ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாள் திருக்கோயில் வளாகத்தில் "கோயில் தூய்மை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி"யை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (09.09.2016) துவக்கி வைத்தார்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைப்படி, தமிழ்நாடு அரசு சுற்றுச்சூழல் துறையின் சார்பில் தமிழகத்தில் உள்ள 11 பிரசித்தி பெற்ற கோயில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, அவற்றின் தூய்மையையும், வரலாற்று பெருமையையும் காக்கும் வகையில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளும் விதமாக விழிப்புணர்வு நிகழ்ச்சிகள் நடத்தப்பட்டு வருகிறது. அதன் ஒருபகுதியாக இன்று, நடைபெற்ற துவக்க நிகழ்ச்சியில் விருதுநகர் மாவட்ட தியாகராஜர் மேல்நிலலைப்பள்ளி, திரு.வி.க மேல்நிலலைப்பள்ளி, புனித இருதய மகளிர் மேல்நிலலைப்பள்ளி, சி.எம்.எஸ் மகளிர் மேல்நிலலைப்பள்ளி, நாகம்மாள் ராகையா தேசிய மகளிர் மேல்நிலலைப்பள்ளி ஆகிய பள்ளிகளில் உள்ள தேசிய பசுமைப்படையைச் சேர்ந்த 500 மாணவ, மாணவிகள் மற்றும் ஆசிரியர்கள் பங்குபெற்ற "கோயில் தூய்மை பாதுகாப்பு விழிப்புணர்வு பேரணி"யை மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. அ.சிவஞானம்,இ.ஆ.ப., அவர்கள் துவக்கி வைத்தார்.

இந்த விழிப்புணர்வு பேரணி மாட வீதிகள் மற்றும் முக்கிய வீதிகளின் வழியே சென்று கோயில் வாசலை வந்தடைந்தது. இப்பேரணியில் கலந்துகொண்ட மாணவ, மாணவிகள் ஆண்டாள் திருக்கோயிலின் முக்கியத்துவத்தையும், கோயில் வளாகத்தினை தூய்மையாக பாதுகாத்திட வேண்டும், மரம் வளர்ப்போம், பூமியை காப்போம், பிளாஸ்டிக் தவிர்த்து பிராத்தனை, இறைவனுக்கு செய்யும் அர்ச்சனை, வாகனம் உமிழும் புகை, வாழ்க்கைக்கு பகை, மழை நீரை சேமிப்போம், மண் வளத்தை பாதுகாப்போம் என்ற வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பதாகைகளை ஏந்தி, கோஷங்கள் எழுப்பியவாறு சென்றனர்.

மேலும், 11.09.2016 முதல் 18.09.2016 வரை கோயில் வளாகத்தின் தூய்மையை பாதுகாக்கும் வகையில் பொதுமக்கள் மற்றும் வியாபார நிறுவனங்களுக்கு சுற்றுச்சூழல் விழிப்புணர்வு வாசகங்கள் அடங்கிய சுவரொட்டிகள் மற்றும் ஸ்டிக்கர்கள் வழங்குதல், தேர்வு செய்யப்பட்ட இடங்களில் குப்பைத்தொட்டிகள் அமைத்தல், கோயில் வளாகத்தில் பிளாஸ்டிக் பைகளின் பயன்பாட்டினை தவிர்க்கும் பொருட்டு பொதுமக்களுக்கு துணிப்பைகள் வழங்குதல், கலைக்குழுவினரின் சுற்றுச்சூழல் விழிப்புணர்வு கலைநிகழ்ச்சிகள், கோயில் வளாகத்தில் சுற்றுச்சூழல் பாதுகாப்பு வாசகங்கள் அடங்கிய விழிப்புணர்வு பலகைகள் நிறுவுதல் போன்ற பல்வேறு நிகழ்ச்சிகள் நடைபெற உள்ளது.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் திரு.அ.புகழேந்தி, மாசு கட்டுப்பாட்டு வாரியத்தின் மாவட்ட சுற்றுசூழல் பொறியாளர் திரு.ராம்மோகன், உதவி சுற்றுசூழல் பொறியாளர் திரு.தங்கரதி, விருதுநகர் மாவட்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் திரு.ராஜா, மதுரை மாவட்ட சுற்றுச்சூழல் விழிப்புணர்வு ஒருங்கிணைப்பாளர் திரு.எம்.எஸ்.பி.குழந்தைவேல் உட்பட பலர் கலந்துகொண்டனர்.

**வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விருதுநகர்.**